


**27.04.2025**

**தலைப்பு செய்திகள்**

**1.** பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு காரணமானவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தில் பொதுமக்கள் தொடர்ந்து பங்களிக்க வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

2. நாட்டின் வேளாண் துறை மேம்பாட்டிற்கு மத்திய அரசு முனைப்புடன் பல்வேறு திட்டங்களை செயலாற்றுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

**3.** தமிழகத்தில் தூய்மையை பராமரிக்கும் வகையில் குப்பை வாகனங்களின் செயல்பாடு உறுதி செய்யப்பட வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் கூறியுள்ளார்.

**4.** கோடை விடுமுறையை ஒட்டி கன்னியாகுமரி உள்ளிட்ட சுற்றுலா தலங்களில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

5. சீனாவில் நடைபெறும் சுதிர்மன் கோப்பை பேட்மிண்டன் ஒற்றையர் பிரிவில் H.S. பிரணாய் பி.வி.சிந்து ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

**இனி விரிவான செய்திகள்**

************

**மன்-கீ-பாத்**

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு காரணமானவர்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 121-வது முறையாக இன்று உரையாற்றிய அவர், தீவிரவாதத்திற்கு எதிரான போரில் 140 கோடி இந்தியர்களின் ஒற்றுமை மிகப்பெரிய பலமாக திகழும் என்றார்.

இந்த சவாலை உறுதியுடன் எதிர்கொள்ள வேண்டும் என்று கூறிய பிரதமர் உலக நாடுகள் இத்தாக்குதலுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்து வருவதாக கூறினார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என்றும் பிரதமர் உறுதியளித்தார்.

அண்மையில் காலமான முன்னாள் இஸ்ரோ தலைவர் கஸ்தூரி ரங்கன் மறைவிற்கு இரங்கல் தெரிவிப்பதாக கூறிய பிரதமர் அன்னாரின் வழிகாட்டுதலில் இஸ்ரோ உலகளாவிய அங்கீகாரத்தை பெற்றதாக கூறினார்.

நாட்டின் புதிய தேசிய கல்வி கொள்கையை உருவாக்கியதிலும் அன்னாரது பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

விஞ்ஞானிகளின் அர்ப்பணிப்பு மனப்பான்மையின் விளைவாக இந்தியா உலகளாவிய விண்வெளி சக்தியாக மாறியுள்ளதாகவும் அண்மையில் ஒரே நேரத்தில் 104 செயற்கைகோள்களை ஏவி சாதனைபடைத்ததாகவும் பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

சந்திரனின் தென் துருவத்தை அடைந்த முதல் நாடு என்ற பெருமையை பெற்ற இந்தியா செவ்வாய் கிரக சுற்றுப்பாதை பயணத்தை மேற்கொண்டதன் மூலமும்,

சூரியனுக்கு மிக அருகில் சென்று ஆய்வு மேற்கொண்ட ஆதித்யா எல்.1 விண்கலத்தின் மூலமும் உலக அளவில் விண்வெளி திட்டங்களில் முன்னிலை வகிப்பதாக கூறினார்.

பல்வேறு நாடுகள் இஸ்ரோவின் உதவியுடன் விண்வெளி தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருவதாக கூறிய பிரதமர் சந்திரயான் 3-ன் வெற்றியை உலகம் உற்றுநோக்கியதாக கூறினார்.

மியான்மரில் நேரிட்ட நிலநடுக்கத்தின்போது ஆபரேசன் பிரம்மா திட்டத்தின் கீழ் நாட்டின் விமானப்படை, கப்பல் படைகளின் மீட்பு மற்றும் நிவாரண பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டதாக கூறினார்.

ஆபரேசன் பிரம்மாவில் பங்கேற்ற அனைவர் குறித்தும் நாடு பெருமை கொள்வதாகவும் கூறினார்.

இதன்மூலம் மனிதநேயத்திற்கான அடையாளமாக இந்தியா திகழ்வதாக கூறினார்.

எத்தியோப்பியா நாட்டிலிருந்து இதய நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இந்தியாவில் சிகிச்சை அளிக்கப்படுவது பற்றி குறிப்பிட்ட பிரதமர் இந்திய மருத்துவ வசதிகள் தொடர்ந்து மேம்பட்டு வருவதாகவும் இதன்பலன் பிற நாட்டு குடிமக்களுக்கும் கிடைத்து வருவதாகவும் பெருமிதம் தெரிவித்தார்.

ரேபிஸ், டெட்டனஸ், ஹெப்படைட்டிஸ் பி மற்றும் இன்∴புளுயன்சா போன்ற நோய்களுக்கான தடுப்பூசிகள் அண்மையில் ஆப்கானிஸ்தானிற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக கூறிய பிரதமர் நேபாளத்தின் வேண்டுகோளின்படி மருந்துகள் தடுப்பூசிகள் அதிக அளவில் அந்நாட்டிற்கு அனுப்பப்பட்டதாகவும் கூறினார்.

இயற்கை பேரிடர்களின்போது கைபேசிகளில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் உருவாக்கப்பட்ட சாசெட் என்ற சிறப்பு செயலியின் மூலம் உதவிபெறலாம் என்று குறிப்பிட்ட பிரதமர் இந்த செயலி பல்வேறு மொழிகளில் தகவல்களை வழங்கி வருவதாகவும் இந்த செயலி குறித்த தங்களது கருத்துக்களை மக்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சதீஸ்கர் மாநிலம் தண்டேவாடாவில் உள்ள அறிவியல் மையத்தில் 3D பிரிண்டர்கள், ரோபோ கார்கள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குழந்தைகளையும் பெற்றோரையும் வெகுவாக கவர்ந்திருப்பதாக குறிப்பிட்ட பிரதமர் நவீன அறிவியலின் ஆற்றல் மனித குலத்திற்கு செய்யும் சேவை மகத்தானது என்றார்.

அறிவியல் மற்றும் புதுமை மீது உள்ள ஈடுபாடு நாட்டை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லும் என்றும் தெரிவித்தார்.

உலக சுற்றுச்சூழல் தினம் வரும் ஜூன் 5ஆம் தேதி கடைபிடிக்கப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர் அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் பிரச்சாரம் ஓராண்டை நிறைவுசெய்வதாகவும் இதன்கீழ் 140 கோடி மரங்கள் நடப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்தில் உள்நாடு மட்டுமன்றி பல்வேறு நாட்டினரும் ஆர்வத்துடன் ஈடுபட்டது மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

இதில் பொதுமக்கள் தொடர்ந்து பங்களிக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

கடந்த சில ஆண்டுகளில் புவி வெப்பமயமாதலுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நகரங்களில் ஒன்றாக அஹமதாபாத் மாறி வருவதாக கூறிய பிரதமர் அங்கு 70 லட்சத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டதாக கூறினார்.

மன உறுதியுடன் மேற்கொள்ளப்படும் செயல்கள் வெற்றிபெறும் என்ற கூற்றுக்கு ஏற்ப தற்போது நாட்டில் மாற்று விவசாய முறைகளின் மூலம் விவசாய சாகுபடிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

இதன்படி கர்நாடகாவின் பாஹல்கோட்டில் சமவெளி பகுதியின் அதிக வெப்பநிலையிலும் ஆப்பிள் சாகுபடி செய்யப்படுவதாகவும்,

கேரள மாநிலம் வயநாட்டில் குங்கும பூ உற்பத்தி, மண் தேவையில்லாத ஏரோபோனிக்ஸ் விவசாயத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

இதேபோல் கொடைக்கானலில் கா.ஃ.பி பயிரிட்டு வந்த விவசாயி திரு. வீரஅரசு லிச்சி மரக்கன்றுகளை நடவு செய்து அம்மரங்கள் காய்க்க தொடங்கியுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

இது அப்பகுதி விவசாயிகளுக்கு ஊக்கம் அளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

1917ஆம் ஆண்டு தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் தலைமையில் சம்பாரன் சத்யாகிரகம் நடைபெற்றதாக கூறிய பிரதமர் அதன்மூலம் ஆங்கிலேயர்கள் இந்திய விவசாயிகளை இண்டிகோ விவசாயத்திற்கு கட்டாயப்படுத்தும் சட்டத்தை நிறுத்திவைத்ததாக சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து நாட்டின் சுதந்திர போராட்ட வீரரும், நாட்டின் முதல் குடியரசு தலைவருமான டாக்டர் ராஜேந்திரபிரசாத் எழுதிய **சம்பாரனில் சத்தியாகிரகம்** புத்தகத்தை இளைஞர்கள் வாசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சுதந்திர போராட்ட வீரர்களின் தீரமிக்க உணர்வுகளை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர்,

முதல்சுதந்திர போராட்ட ஆண்டு தினம் மே 10ஆம் தேதியும்,

சுதந்திர போராட்ட வீரர் பாபு வீர் குன்வர் சிங்கின் நினைவு தினம் ஏப்ரல் 26ஆம் தேதியும் கடைபிடிக்கப்படும் என்றார்.

************

**ஜக்தீப் தன்கர்**

நாட்டின் வேளாண் துறை வளர்ச்சி மற்றும் விவசாயிகளின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் **வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான வேளாண் கல்வி புதுமை மற்றும் தொழில்முனைவோரை வலுப்படுத்துதல்** என்ற தலைப்பிலான கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர் கார்பரேட் நிறுவனங்கள், வேளாண் துறை மற்றும் அது சார்ந்த ஆராய்ச்சிகளில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்றார்.

முன்னதாக அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின் கீழ் பல்கலைகழக வளாகத்தில் இன்று மரக்கன்றுகளை திரு.தன்கர் நட்டுவைத்தார்.

************

**முதலமைச்சர்**

நீதி கட்சி நிறுவனர்களுள் ஒருவரான சர்.பி.டி. தியாகராயரின் 173-ஆம் ஆண்டு பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில் வலுவான கொள்கை அடித்தளத்துடன் ஆட்சி செய்வதற்கான வழிமுறைகளை வகுத்தவர் தியாகராயர் என்று கூறியுள்ளார்.

சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

************

**ராமசந்திரன்**

குப்பை அகற்றும் வாகனங்களின் பராமரிப்பு மற்றும் பயன்பாடு உறுதி செய்யப்பட வேண்டும் என்று மாநில வருவாய் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 54 லட்ச ரூபாய் மதிப்பில் குப்பை சேகரிக்கும் 61 பேட்டரி மின்வாகன சேவைகளை துவக்கிவைத்து பேசிய அவர் பொதுமக்கள் மட்கும், மட்காத குப்பைகளை தனித்தனியாக பிரித்து வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

************

**ஜல்லிகட்டு செந்தில்பாலாஜி**

கோவை செட்டிபாளையத்தில் ஜல்லிகட்டு போட்டிகளை மாநில மின்சாரத்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி இன்று தொடங்கிவைத்தார்.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

************

**அரசாணை**

தமிழ்நாடு முழுவதும் ஆட்சேபனையற்ற இடங்களில் குடியிருக்கும் 80 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 17ஆம் தேதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்டது.

பட்டா பெறுவதற்கான வருமான உச்சவரம்பை 3 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

************

**இருவரி**

**கஷ்மீர் பஹல்காம் தீவிரவாத தாக்குதலை** கண்டித்தும், தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும் திருவள்ளூர் மாவட்டம் மஞ்சக்கரணையில் இன்று மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு** விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் விளையாட்டு விடுதிகளில் சேர விருப்பமுடைய 7, 8, 9 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணாக்கர் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**சிவகங்கை மாவட்டம் திருபுவனத்தில்** தென்னை மரங்களில் வெள்ளை ஈக்களின் பாதிப்புகளை தடுக்க விவசாயிகள் மாவட்ட தோட்டக்கலை துறை அலுவலகத்தை அணுகி பயன்பெறலாம் என ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

**திருவள்ளூர் மாவட்டத்தில் பிரதமரின் சூரிய** வீடு இலவச மின்சார திட்டத்தின் மூலம் அரசு மானியம் பெற pmsuryaghar.gov.in இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

**பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு** மைதானத்தில் போதை பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பாரா கிளைடிங் சாகச நிகழ்ச்சியை ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் இன்று தொடங்கிவைத்தார்.

இந்த பாரா ஷூட்டில் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் இடம்பெற்றிருந்தன.

**கன்னியாகுமரி மாவட்டம் கோணம்பகுதியில்** கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 3 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து தடை செய்யப்பட்ட மூன்றரை கிலோ போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

************

**கோடை விடுமுறை**

கோடை விடுமுறையை ஒட்டி கன்னியாகுமரி உள்ளிட்ட சுற்றுலா தலங்களில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவு பாறை, திருவள்ளுவர் சிலை உள்ளிட்ட பகுதிகளில் தமிழகம் மட்டுமன்றி கேரளா ஆந்திரா கர்நாடகா தெலங்கானா மாநிலங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உதகை, கொடைக்கானல், ஏற்காடு, உள்ளிட்ட சுற்றலா தலங்களில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

************

**கன்னியாகுமரி**

கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை சார்பில் குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சார இயக்கம் இன்று தொடங்கப்பட்டது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

************

**யானை**

கிருஷ்ணகிரி மாவட்டம் சின்னமலையில் இன்று விவசாய பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் யானை தாக்கி உயிரிழந்ததை அடுத்து அப்பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு வனத்துறை எச்சரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

************

**கோவில்**

மதுரை அருள்மிகு கள்ளழகர் திருக்கோவில் சித்திரை திருவிழா கொட்டகை முகூர்த்த கால் ஊன்றும் நிகழ்வுடன் இன்று தொடங்கியது.

************

**பேட்மிண்டன்**

சுதிர்மன் கோப்பை பேட்மிண்டன் போட்டிகள் சீன Xiamen-இல் இன்று தொடங்கி வரும் 4 ஆம் தேதிவரை நடைபெறுகின்றன..

இப்போட்டிகளில் லக்ஷயா சென் மற்றும் பி.வி.சிந்து தலைமையில் இந்திய வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் H.S. பிரணாய் - இன்று டென்மார்க்கின் **Anders Antonsen**-ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் பி.வி.சிந்து – டென்மார்க்கின் **Line Hojmark** உடன் மோதுகிறார்.

************

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸை எதிர்கொள்கிறது.

இரவு ஏழரை மணிக்கு டெல்லியில் நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவுடன் மோதுகிறது.

************

**மகளிர் கிரிக்கெட்**

கொழும்புவில் நடைபெறும் இந்தியாவிற்கு எதிரான சர்வதேச மகளிர் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் இலங்கை சற்றுமுன் 24 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 103 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக மழை காரணமாக ஆட்டம் 39 ஓவராக குறைக்கப்பட்டுள்ளது.

************